645

உயர்திரு

சித்தூர் ஆ. கந்தசாமி முதலியார்

# சரித்திரச் சுருக்கம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 MAR 1951
MADRAS

மைசூர் :

ஆர்க்காடு - தெளிசிங்க முதலியார்

எழுதியது

1951

Y44wMS5
N51
113659

உயர்திரு

சித்தூர்

ஆறுமுக முதலியார் குமாரர்

# கந்தசாமி முதலியார்

## சரித்திரச் சுருக்கம்




மைசூர்

ஆர்க்காடு தெளிசிங்க முதலியார்

எழுதியது



1951

சாது அச்சுக்கூடம்
இராயப்பேட்டை, சென்னை - 14

113659

# முன்னுரை


என் அன்புடைய அம்மான் சித்தூர் ஆ. கந்தசாமி முதலியார் எல்லாச் சமயங்களும் துதிக்கும் இல்லறத்தில் நின்று, நிராசை தவம் பொறுமை இரக்கம் மகிழ்ச்சி வாய்மை அறிவுடைமை அடக்கமுடைமையாகிய சாத்துவிக குணங்கள் உடையவராக வாழ்ந்துவந்த ராஜயோகியாவர். உத்தமமான மனை வாழ்க்கை நடத்தி நன்கலனாகிய நன்மக்களைப் பெற்று கல்வியொழுக்கங்கள் நிரம்பினவராக அவர்களை வளர்த்தவர். தமது உறவினராகிய செழுங்கிளையைப் பொருட்செல்வம் நிரம்பப் பெற்றவரைக் காட்டிலும் மேலாகத் தாங்கி வந்தவர். நான் கல்வி நலம் வாய்க்கப் பெறுவதற்கும் முன்னுக்கு வருவதற்கும் இவரே காரணமாக இருந்தவர். எனக்கு எழுபத்து நாலு ஆண்டுகளாகியும் இன்னும் இவர் செய்த நன்றியை உள்ளும்போதெல்லாம் என் நெஞ்சம் கரைகின்றது. பிறர்க்கென வாழ்ந்த இவரது வாழ்க்கையை நினைக்கும் போதெல்லாம் என் நெஞ்சம் நெக்குருகுகின்றது. என் நன்றியறிதலைப் புலப்படுத்துவதற்கு, இவரது வாழ்க்கைச் சரிதத்தை எழுதி வெளியிடுவதே ஏற்ற வழி என்று நான் எண்ணி அப்படிச் செய்யப் பல ஆண்டுகளாகப் பேரவாக் கொண்டிருந்தேன். மேலும் இவரது திவ்விய தூய வரலாற்றை இவர் குடும்பத்தினரும் சந்ததியாரும் அறிந்திருக்க வேண்டும் என்றும் நான் கருதினேன்; இந்த உத்தமருடைய

வரலாறு அவர்களுக்கு நல்ல வழிகாட்டியாகும் என்பது என் நம்பிக்கை.

இந்த இரண்டு கருத்துக்களையும் உட்கொண்டு இவரது வரலாற்றைச் சுருக்கமாக எழுதி இப்போது வெளியிடுகின்றேன். இவரோடு சில ஆண்டுகள் உடனுறைந்தும், நெடுங்காலம் நெருங்கிப் பழகியும் இவரது அற்புத குணங்களை நன்கு அறிந்திருக்கின்றேன். நான் நேரில் கண்டறிந்தவற்றையே முக்கிய ஆதாரமாகக் கொண்டு இதை எழுதுகின்றேன். இதில் சில தோத்திரப் பாடல்களையும் கோத்திருக்கிறேன். பல ஆண்டுகளாக என் நெஞ்சில் எழுந்து கொண்டிருந்த விருப்பத்தை நிறைவேற்றி வைத்த திருவருளை வழுத்துகின்றேன்.

மைசூர்,
20-12-50.

ஆ. தேளிசிங்க முதலியார்



ராஜயோகி

சித்தூர் ஆ. கந்தசாமி முதலியார்

*பிறந்தது :* 1-7-1855.

*சாந்தநிலையுற்றது :* 11-12-1922.

மறைந்தனராயினும் மறந்திலம் இவரை யாம்

இவர்

***கட்புலங் காணாது விட்புலம் போயினும்***
***பெட்புடன் மிளிர்வர் எம் உட்புலந்தனிலே***

*உயர்திரு. சித்தூர் சுவாமி நரசிம்ம தாசரவர்களுடைய சீடரான சித்தூர் ஆறுமுக முதலியாருடைய*

மகன், சென்னை எழும்பூர் சர்க்கார் கண்ணாஸ்பத்திரியில் முப்பத்துமூன்று ஆண்டுகள் எழுத்தாளராவும் உக்கிராண மேலதிகாரியாகவும் இருந்து, இடைவிடாமல் உழைத்து, சிறந்த மேதாவிகளான கண் வைத்தியர்களுடைய முழு நம்பிக்கையும் நன்குமதிப்பும் பெற்றவர். காந்தியுகத்துக்கு முற்பட்ட காலத்திலே அன்பு நெறியாகிய சன்மார்க்கத்திலே ஒழுகினவர். திருவள்ளுவரைப்போல, முன்மாதிரியான உயர்ந்த இல்வாழ்க்கை நடத்தினவர். உண்மை நெறியிலே நேர்மையாக நடந்தவர். தமது சகோதரிகள் சுற்றத்தார் நண்பர் முதலானவர்களிடம் இவர் காட்டின அன்பும் அருளும் குன்றின் மீதிட்ட விளக்குப் போல ஒளிர்கின்றன.



ஸ்ரீமதி : க. விருத்தா அங்கம்மாள் அம்மாள்

*பிறந்தது : 1 ஏப்ரில் 1862*

*சாந்தபதம் புகுந்தது : 2 ஜுலை 1933*

***" எங்களை விட்டு இங்கு ஏகினராயினும்***
***எங்கள் நெஞ்சகம் விட்டு நெகிழ்ந்திலர் "***

இம்மாது சிரோமணி தமது கணவரோடு நாற்பது ஆண்டுகாலமாய் இல்லறம் நடத்தி, அருமை மக்களைப்

பெற்று, திருவள்ளுவ நாயனார் திருக்குறளில் அருளியபடி கற்புக் கடம் பூண்டு, கணவருடைய ஏழு சகோதரிகளின் மனைவாழ்க்கையில் ஈடுபட்டு மனங் கோணாமல் கணவருடன் ஒத்துழைத்த பங்காளர். இனிய நகை முகத்துடன், வைகலும் செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருந்த செல்வி. ஒருத்தரைப்போல எல்லாரிடத்திலும் விசுவாசம், சத்தியம், தாராளம், தயவு, மரியாதையுடன் ஒழுகிவந்த உத்தமி.

ஓம்

# சித்தூர் ஆ. கந்தசாமி முதலியார்

அவர்கள்

# சரித்திரச் சுருக்கம்

## பெற்றோர் வரலாறு

''பாலாறு வளஞ்சுரந்து நல்க மல்கும்
பாளைவிரி மணங்கமழ்பூஞ் சோலை தோறும்
காலாறு கோலியிசை பாட நீடு
களிமயில்நின் றுடுமியல் தொண்டை நாட்டு''ப்

பழைய ஊர்களிலே பல பதிகள் தென்னிந்திய சரித்திரத்திலே மிக்க புகழ்பெற்றவை. அத்தகைய பதிகளிலே சித்தூர் ஒன்று. இன்றும் அது ஒரு ஜில்லாவுக்குத் தலைநகர். கல்வியிலும் செல்வத்திலும் சிறந்த குடிகளுக்கு உறைவிடம். அரசியலிலும் நாட்டு முன்னேற்றத்திலும் நாட்டமுடைய மக்களைப் பெற்றது. கவிகளும், சாதுக்களும் அங்குத் தோன்றியிருக்கின்றனர். இப்படிப் பெருமையோடு நிலைபெற்று வருகின்ற சித்தூரிலே பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுவிலே சுவாமி நரசிம்ம தாசர் என்னும் சீவன் முத்தர் ஒருவர் விளங்கினார். இந்த அனுபூதிச்

செல்வரைப் பலர் அடுத்து மெய்யுணர்வு பெற முயன்றனர். இவரிடம் பயின்ற சீடர்களுள்ளே சித்தூர் ஆறுமுக முதலியார் என்பவர் தலைசிறந்தவர். முதலியாருடைய தீவர பக்குவத்தையும், அவர் தம்மிடம் அணுகினவர்களுக்கு உண்டாயிருந்த ஐயந்திரிபுகளை அகற்றித் தெளிவை யுண்டாக்கும் திறத்தையும் கண்டு எல்லோரும் இவரை ஆறுமுக குரு என்று அழைத்து வந்தார்கள்.

ஆறுமுக முதலியார் சித்தூரிலே மிகப் பழையதான ஒரு துளுவ வேளாள குடும்பத்திலே பிறந்தவர். சித்தூர் என்று ஒரு ஜில்லாவை வகுப்பதற்கு முன், சித்தூரானது வட ஆர்க்காடு ஜில்லாவைச் சேர்ந்திருந்தது. வட ஆர்க்காடு உண்மையாகவே துளுவவேளாள வளநாடு. இங்கு இவ்வேளாள வகுப்பினர் பலநூற்றுண்டுகளாக மேன்மையோடு வாழ்ந்து வந்திருக்கின்றனர். மேலும் சித்தூர் இந்த வேளாளருடைய கோட்டை என்றே சொல்லலாம். ஆர்க்காட்டிலிருந்தும், சித்தூரிலிருந்தும் இவர்கள் இந்தியாவின் பல பாகங்களுக்குச் சென்று குடியேறி, அவ்வாறு சென்று நிலைத்த இடங்களிலெல்லாம் தங்கள் குடிப்பிறப்பு, கல்வி, நல்லொழுக்கம், அறிவு, திறமை, வினைத்தூய்மை, மனத் திண்மை முதலான குணங்களினாலே அவ்வப் பாகங்களிலுள்ள ஜனங்களுடைய நன் மதிப்பைப் பெற்று வாழ்ந்து வருகின்றனர். அரிய பெரிய செயல்களைச் செய்து மகிமையும் மேன்மையும் பொருந்தினவர்களாய்ப் பலரும் தங்களைக் கொண்டாடும்படி நடந்து வருகின்

றனர். இப்படிப்பட்ட பெருமைவாய்ந்த துளுவ வேளாள வமிசத்திலே தோன்றினவர் சித்தூர் ஆறுமுக முதலியார்.

இற்றைக்கு ஒரு நூற்றுண்டுக்கு முற்பட்ட அக்காலத்திலே நமது முன்னோர்கள் எளிய நல்ல அமைதியான வாழ்க்கையிலேயே விருப்பமுள்ளவராக இருந்தனர். இக்காலத்திலே நாகரிகம் என்று நாம் தவருக எண்ணும் நடையுடை பாவனைகளிலும் உணவுகளிலும் உண்டாயிருக்கும் விபரீதங்கள் அவர்களிடத்திலே காணப்படவில்லை. அவர்கள் உணவு மிகவும் எளியதாகவும் உடலுக்கு உரத்தையும் நலத்தையும் தருவதாகவும் இருந்தது. காப்பி, தேநீர் முதலிய தீமை பயக்கும் விஷ கஷாயங்களை அவர்கள் பருகினதில்லை. பழையது சாப்பிடுவார்கள். நீராகாரம் அருந்துவார்கள். ஒரு நாளைக்கு நாம் உண்பது போல ஆறு தடவை உண்ணுமல் இரண்டே தடவை உண்டு வந்தார்கள். அவர்கள் தீங்கு ஒன்றும் அறியாத எளிய வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். தூய ஒழுக்கமுடையவர்களாக இருந்தனர். பொறுமையோடும் அமைதியோடும் தங்கள் அன்றுட நடவடிக்கைகளை நடத்தி வந்தனர். இந்தக் காரணங்களினுலே இக்காலத்தில் நம்மிடத்தில் காணும் தீய விளைவுகள் ஒன்றும் அவர்களிடம் பொதுவாகக் காணப்படவில்லை. இப்போது நம்மைப் பிணிக்கும் நோய்கள் அவர்களை அணுகவும் அஞ்சின. வயிற்று நோயோ, குன்மமோ, க்ஷயமோ அந்தப் பழைய குடும்பங்களில்

புகுந்ததே யில்லை. நோய்ந்து மெலிந்து நலிந்து சிணுங்கி ஒடுங்கி வதங்கிக் காணும் இக்காலத்து எலும்புச் சட்டகம் போன்ற உருவங்கள் அப்போது இருந்ததில்லை. அவர்கள் பலமான உடற் கட்டும், நல்ல ஆரோக்கியமும் உள்ளவர்களாக இருந்தனர்.

ஆறுமுக முதலியார் இப்படிப்பட்ட அரோக திடகாத்திரம் வாய்க்கப் பெற்றவர். உடலின் நலத்திற்கும் உள்ளத்தின் நலத்திற்கும் ஆதாரமான எளிய பழக்கங்கள் உள்ளவர். சீரிய நடத்தை யுள்ளவர்.

உரிய வயதிலே ஆறுமுக முதலியாருக்குத் திருமணமாயிற்று. சித்தூரிலே சிறந்த ஒரு பழைய வேளாள குடும்பத்திலே மேஸ்திரி முனிசாமி முதலியாருக்கும் கரும்பத்தம்மாளுக்கும் தவப் புதல்வியாகத் தோன்றிய ஜானகியம்மாளைத் தமக்கு வாழ்க்கைத் துணையாக இவர் கொண்டார். இருவருஞ் சேர்ந்து இல்லற வாழ்க்கை என்னும் அன்புச் சகடத்தை நடத்தி வந்தனர். ஆறுமுக முதலியார் தமது ஜீவனோபாயமாக மேற் கொண்டிருந்த தொழில் கட்டட வேலையாகும். இந்த மனைச் சிற்பத் தொழிலிலே மிகவும் வல்லவரென்றும்—அந்தப் பெயரைக் காட்டிலும் சிறந்ததாக—மிகவும் நேர்மை யானவரென்றும் ஆறுமுக குரு கொண்டாடப்பட்டு வந்தார். சித்தூரிலும் அதற்கருகிலுள்ள ஊர்களிலும் உள்ள பல பழைய கட்டடங்கள் ஆறுமுக குரு கட்டினவை. நமது முன்னோர் உழைப்பின் பெருமையை உணர்ந்திருந்தனர். கள்ளமின்றிக்

கபடமின்றிச் சோம்பலின்றி உண்மையான நெறியில் மெய்வருந்திச் செய்யும் எந்தத் தொழிலும் மேன்மையானதாகும்; மானமானதாகும்; அதுவே கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றும் திற மாகும் என்று அவர்கள் கருதினர். நும் மெய்வருத் திக் கைசெய்து உய்ம்மினோ என்பதன்றோ திருவாய் மொழி.

## பிறப்பு

ஆறுமுக குருவும் ஜானகியம்மாளும் இவ்வாறு சித்தூரிலே செம்மை நலம் பொருந்திய மங்கல மனை வாழ்க்கை நடத்தி வந்தார்கள். நாளடைவில் இவர் களுக்கு மக்கள் தோன்றினர். முதலாவதாகப் பிறந் தவர் ஒரு பெண். இவர்கள்தான் என் அருமைத் தாயார். இரண்டாவது பேருகத் தோன்றினவர் தான் இந்த வரலாற்றுக்கு நாயகனாகிய என் "அன் புடைய மாமன்" கந்தசாமி முதலியார். இவருக்குப் பிறகு ஆதியம்மாள், இரத்தினம்மாள், துளசியம் மாள், மீனாட்சியம்மாள், அபிராமியம்மாள், சேது அம்மாள் என்னும் பெண்மக்கள் அறுவர் பிறந்தனர். இந்த எட்டுக் குழந்தைகளையும் எங்கள் தாத்தா ஒரு வரே தமது கையின் உழைப்பினாலே காப்பாற்றி வந்தனர். தம் ஒருவருடைய தோளின்மீதே இந்தக் குடும்ப பாரம் அனைத்தையும் அவர் பொறுத்து வந்தார். குழந்தைகள் பெருகி வளர வளர வறுமை நிலை மேலிட்டது. ஜானகியம்மாள் தமது கணவர் கொண்டுவரும் ஊதியத்தைக் கொண்டு தாமும்

பாடுபட்டுக் குழந்தைகளைப் பராமரித்து வந்தனர். என் தாத்தா ஆயாவைப்பற்றிய நினைவு எனக்கு இப்போது இருப்பது ஒன்றே ஒன்றுதான். அது என்னவென்றால் சித்தூரிலே கிறிஸ்தவக் கோவிலுக்கு எதிரிலே நேமந்தக்காரத் தெருவிலிருந்த இவர்கள் வீடுதான். இந்த வீட்டில்தான் இந்தப் பெருங் குடும்பத்து மக்கள் அனைவரும் பிறந்தது. என் மாமா, என் அருமைத் தாயவர்களின் தம்பி, பிறந்த இல்லமும் இதுவேயாம்.

எங்கள் மாமா பிறந்த அகத்திலே பொருட் செல்வம் சுருங்கியிருந்தாலும் அருட்செல்வத்துக்கும் உடல்நலச் செல்வத்திற்கும் ஒரு குறையுமின்று. மேலே சொல்லியபடி ஆரோக்கியமும் உடல்வலிமையும், உழைப்பின் பெருமையும் கடவுளிடத்து அன்பும் பொருந்திய வீட்டிலே பிறந்த எங்கள் மாமா இயற்கையான எல்லா நலன்களும் பொருந்தியவராகவே அவதரித்தனர். வேறு செயற்கை அனுகூலங்கள் இவருக்கு இருந்ததில்லை.

இவர் பிறந்தது நமது நாட்டிலே பெரிய சிப்பாய்க் கலகம் நடப்பதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன் கி. பி. 1855ஆம் ஆண்டிலே. இவர் பிறந்த நாள் எது என்று அறியக் கூடவில்லை.

## கல்வி

ஏழு பெண்மக்கள் பிறந்த குடும்பத்திலே உதித்த ஒரே ஆண் மகவு ஆதலால் பெற்றோர் இவரை மிகவும் அருமையாகப் போற்றிப் பேணி

வளர்த்து வந்தார்கள் என்பதற்கு ஐயமில்லை. ஆயினும் வளஞ் சுருங்கினுலும் மனஞ் சுருங்காத வரும், அருட்செல்வம் நிரம்பிய அறிவாளிகளும் ஆன அந்தப் பெற்ருேர்கள் இவருக்குச் செல்லங் கொடுத்து இவரைக் கெடுத்து விடவில்லை. விவேகிக ளான அந்தத் தாய்தந்தையர் கல்வியின் மேன்மையை யும், ஒழுக்கத்தின் உயர்வையும், இவையிரண்டும் வாழ்க்கைக்கு இன்றியமையாதவை என்னும் உண் மையையும் உணர்ந்தவர்கள் ஆதலால் அவர்கள் தங்கள் வறுமையைச் சிறிதும் கருதாது, இவரைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினுர்கள். அந்தக் காலத்திலே சித்தூரிலே என்ன உயர்ந்த வகுப்பு இருந்ததோ அந்த வகுப்பு முடியப் படித்தார். அக் காலத்திலே சர்க்கார் உத்தியோகம் பெறுவதற்குப் போதுமானது என்று கருதப்பட்டு வந்த யூ. ஸி. எஸ். என்னும் பொதுக் கல்விப் பரீக்ஷையில் மிக்க சிறப்புடன் தேர்ச்சி பெற்ருர். இவர் படித்த பள்ளிக்கூடம் சித்தூர் போர்ட் உயர்தர பாடசாலை. இது ஒரு பெயர்போன பாடசாலை. அக்காலத்திலே இங்குப் புகழ்பெற்ற ஆசிரியர்கள் விளங்கினுர்கள். டைகர் திருவேங்கடசாமி நாயுடு என்பவர் ஒருவர். ராமச்சந்திர ஐயர் என்பவர் மற்ருெருவர். இவர் களைப் போன்ற உயர்ந்த போதகாசிரியரது சிறந்த போதனையின் பயனுகத் திறமைவாய்ந்த மாணவர் பலர் அந்தப் பாடசாலையிலே படித்து வெளிப் போந்தனர். இதே பாடசாலையிலே கந்தசாமி முதலியார் தமிழ்க் கல்வி நலனும் ஆங்கிலக் கல்வி

வளனும் பெற்று அறிவும் ஒழுக்கமும் நிரம்பினவ ராய் வளர்ந்தார்.

இளமையிலே கந்தசாமி முதலியாருடைய ஒழுக்கத்தை உருவாக்கின சீரியர், இவரது பெற்றோரையன்றி, மற்றும் யார் யார் என்பதைப் பற்றியும் அவர்கள் எவ்வாறு இவரை நல்லொழுக்கத்தில் பயிற்றினர் என்பதைப்பற்றியும் என்னல் ஒன்றும் அறியக்கூடவில்லை. இவரைப் பற்றிப் பிற்காலத்திலே நான் அறிந்தவண்ணம் என் மனத்தில் உண்டான கருத்துக்களை இங்கு எழுதுகின்றேன்.

எங்கள் மாமாவும், அவருடைய அக்காளாகிய எனது தாயாரும், ராவ்சாகேப் வே. ப. ராமசாமி முதலியாருடைய தாயாராகிய துளசியம்மாளும் ஆகிய மூவரும் ஆம்பூரில் சில காலம் வளர்ந்து வந்தார்கள். ஆம்பூரில் இந்தக் குழந்தைகளுக்குத் தாய்மாமனுர் சீதாராம முதலியாரென்பவர் சித்தூரிலிருந்து ஆம்பூருக்குச் சென்று அங்கு நாட்டு வைத்தியராக இருந்துவந்தார். இப்படி இவர்கள் ஆம்பூரில் வளர்ந்து வந்ததைக் குறித்து எங்கள் அம்மா எனக்குச் சொல்லியிருக்கிருர்கள். இந்த இரண்டு குடும்பங்களுக்குமிடையே இக்குழந்தைகள் வழியாக இவர்களது இளமையில் ஏற்பட்ட அன்பு என்னும் பாசம் பிற்காலத்திலும் தளராமல் உறுதியாகவே இக்குடும்பங்களை இறுகப் பிணித்திருந்தது. இதன் பயனுகத் தமது ஆம்பூர் பாட்டியையும் மாமாவையும் அவர்களுடைய கடைசிக் காலம் வரையிலும் எங்கள் மாமா தமது வீட்டிலேயே

வைத்து ஆதரித்து வந்தார். இது தானே தாளுண்ட நீரைத் தலையாலே தான் தருவது !

## உ த் தி யோ க ம்

சித்தூர் குடும்பத்தை ஆறுமுக குரு ஒருவரே தாங்கி வந்தார் என்று மேலே சொன்னேன். சொற்ப சம்பாத்தியத்தைக் கொண்டு பத்து உயிர் கள் பிழைக்க வேண்டுமாதலால் அங்கு வறுமை குடிகொண்டிருந்தது. இந்த வறுமையிலேயே பிறந்து, வறுமையிலேயே வளர்ந்து, வறுமையி லேயே பயின்று வந்த எங்கள் மாமா யூ. ஸி. எஸ். பரீக்ஷையில் தேர்ந்த பிறகு ஏதாவது உத்தியோகத் தில் சேர முயன்றார். 1879ஆம் ஆண்டிலே நான் பிறந்த மூன்று ஆண்டுகளுக்குள்ளே, எங்கள் மாமா பெங்களூருக்கு வந்தார் என்றும், அப்போது பஞ்சகாலத்தில் ஜனங்களுக்கு வேலை கொடுத்துப் படியளக்கும் பொருட்டுப் பெங்களூரிலிருந்து மைசூ ருக்கு ரயில்போட்டுக் கொண்டிருந்தார்களென்றும், அந்த வேலையிலே இவர் சேர்ந்துகொண்டா ரென் றும் கேள்விப்பட்டிருக்கிறேன். அப்போது கும்பல் கூடு என்னும் இடத்தில் இவர் வசித்து வந்தார். இவருக்கு உதவியாக இவருடைய ஆம்பூர் பாட்டியே வந்திருந்தார்கள் என்று தெரிகிறது. இந்தச் சமயத்தில்தான் மைசூர் தேசத்துக் கணக்குப் பரிசோதனை செய்யும் எக்ஸாமினர்ஸ் ஆபீசு மரா மத்துப் பிரிவில் தலைமைக் கணக்கு வேலை பார்த்து வந்த வே. தங்கவேலு முதலியாருக்கும் எங்கள்

மாமாவுக்கும் அறிமுகம் உண்டாயிற்று. தங்கவேலு முதலியார் ஓய்வுபெற்ற பிறகு காஞ்சிபுரத்தில் வாசமாக இருந்துவந்தார். அவருடைய மகளைத் தான் எங்கள் மாமாவின் இரண்டாவது மகனுக்கு மணஞ்செய்து கொடுத்திருக்கிறது.

## சென்னைக்குச் சென்றது

மைசூர் நாட்டில் சில காலந்தான் மாமா இருந்திருக்கிறார் என்று தெரிகிறது. அவரோடு இருந்து அவரைப் பார்த்து வந்த ஆம்பூர் ஆயாவுக்கு டெப்யுடி கலெக்டர் தருமராய முதலியார் என்பவர் சொந்தக்காரர். அவருடைய சகோதரர் திரு. ஆய்ப்பாடி நாராயணசாமி முதலியார் என்பவர் சென்னையில் கடல் சுங்கத் துறையிலே வேலைபார்த்து வந்தார். இவருடைய உதவியினாலே எங்கள் மாமாவுக்குச் சென்னையில் ஒரு வேலை கிடைத்தது. 1879ஆம் ஆண்டிலே சென்னை சர்க்கார் கண் ஆஸ்பத்திரி திறக்கப்பட்டது. அந்த ஆஸ்பத்திரியிலே முதன் முதலாக நியமிக்கப்பட்ட எழுத்தாளராகவும் உக்கிராண மேலதிகாரியாகவும் மாமா சேர்ந்தார். அன்று முதல் அவர் ஆயுள் பரியந்தம் சென்னையில் ராயப்பேட்டையிலேயே வாழ்ந்து வந்தார்.

## ச கோ த ரி க ள்

இவ்வாறு சித்தூர் கந்தசாமி முதலியார் சென்னை கண் ஆஸ்பத்திரியில் வேலைக்கு அமர்ந்தார். சித்தூரையோ பெற்றோரையோ, தம்முடன் பிறந்த

பெண்களையோ, மற்ற சுற்றத்தையோ இவர் என்றும் மறந்தவரே அல்லர். அவர்கள் எல்லாரையும் ஆதரிக்க வேண்டும் என்னும் நினைவு இவர் கருத்தை விட்டு என்றும் அகலவே இல்லை. அரிய முயற்சி செய்து தம் சகோதரிகள் ஒவ்வொருவருக்கும் விவாகம் செய்வித்தார். ஆறுமுக குருவின் முதலாம் பேறாகிய பெண் என் அருமைத் தாயார் கற்பகம்மாள். என் தகப்பனாருக்கு இரண்டாம் தாரமாக இவர்கள் வாழ்க்கைப்பட்டார்கள். இந்த உறவு ஏற்பட்டதன் பயனாகச் சித்தூர் குடும்பத்துக்கும் பெங்களூர், பெள்காம், சிக்கந்தராபாத் முதலிய தொலைவிலுள்ள இடங்களிலிருந்த வேளாள குடும்பங்களுக்கும் சம்பந்தம் விளைவதற்கு ஒரு பெரிய வழி உண்டாயிற்று. சித்தூர் குடும்பத்துப் பெண்களுக்குக் கலியாணம் செய்விப்பதிலே என் தகப்பனார் நிரம்ப முயற்சியெடுத்துக் கொண்டார். எங்கள் மாமாவின் ஒரு சகோதரி ஆதியம்மாள் மாத்திரம் சித்தூரிலேயே வாழ்க்கைப்பட்டார். மற்றவர்களெல்லோரும் மேலே சொன்ன வெளியூர்களில் விவாகமானார்கள்.

சித்தூரிலேயே வாழ்க்கைப்பட்ட ஆதியம்மாள் ஒரு பெண்ணைப் பெற்றார். அப்பால் விதவையாகி விட்டார். இவர் பெண்ணைச் சித்தூர் முனிசாமி முதலியார் என்பவருக்குக் கொடுத்தார்கள். ஆதியம்மாள் விதவையான பிறகு தமது தகப்பனார் வீட்டிலேயே இருந்து வந்தார். தமது தகப்பனாருடைய குணங்களையும், பழக்கங்களையும் நன்கு

அறிந்தவர் ஆதலால் அவற்றிற்குத் தக்கபடி நடந்து அவருடைய சௌகரியங்களையெல்லாம் கவனித்துத் தந்தைக்குப் பணி செய்து கிடப்பதே தாமினிச் செயத் தக்க கடனெனத் தமது காலத்தைக் கழித்து வந்தார். நான் இளைஞனாக இருந்த காலத்து நினைவுகளிலே இந்த அம்மாள் சித்தூர் வீட்டிலே வயது சென்ற தமது தகப்பனாரையும் குடும்பத்தையும் கவனித்து வந்ததும் ஒன்று. நான் குறிக்கும் அந்தக் காலத்தில் எங்கள் மாமா சென்னையில் வசித்துவந்தார். அவர் தாயார் ஜானகியம்மாளும் தம் மகனோடும் மருமகளோடும் பேரப்பிள்ளைகளோடும் சென்னையில் இருந்தார்கள்.

என் தகப்பனார் ஆர்க்காடு அண்ணாசாமி முதலியாருக்குச் சித்தூர் குடும்பத்தில் கலியாணம் ஆனபிறகு, அந்த உறவுபற்றிப் பல வெளியூர்களிலே அந்தக் குடும்பத்துக்குச் சம்பந்தம் உண்டாயிற்று என்று மேலே சொன்னேன். மைசூர் மராமத்து இலாகா பரிசோதகர் ஆபீசு தலைமைக் கணக்கு உத்தியோகத்திலிருந்த ஆ. குருசாமி முதலியாருக்கு நெருங்கிய பந்துவாகிய முனிசாமி முதலியாருக்கு இரத்தினம்மாளை விவாகம் செய்து கொடுத்தார்கள். துளசியம்மாளை பெள்காமிலிருந்த வே. கோ. பச்சையப்ப முதலியாருக்குக் கட்டிக் கொடுத்தார்கள். அக்காலத்திலே பல்லாரி வரையிலுந்தான் ரயில் போட்டிருந்தது. குந்தக்கல் வரையிலேயே பெரிய ரயில். பெண்ணை அழைத்துக்கொண்டு பெள்காம் போகும்போது ஹொஸபேட்டை வழி

யாகப் போனூர்கள். போகும்போதே அந்த ஊரி லிருந்த பழநிவேலு முதலியாருடைய கொழுந்தி யாரை எங்கள் மாமாவுக்கு நிச்சயம் செய்து கொண்டு போனூர்கள். துளசியம்மாள் கலியாணம் முடிந்து பெள்காமிலிருந்து திரும்புகாலையில் ஹொஸபேட்டையில் மாமா கலியாணத்தையும் முடித்துக்கொண்டு வந்துவிட்டார்கள் என்று தெரி கிறது. இந்த விதமாக வே. கோ. இராமகிருஷ்ண முதலியார், வே. கோ. கோவிந்தராஜ முதலியார் தங்கையும் பெங்களூர் தேப்பெருமாள் முதலியார் குடும்பத்துக்கு நெருங்கின உறவினருமான எங்கள் மாமி விருத்தாம்பாள் அங்கம்மாள் எங்கள் மாமா வின் குடும்பத்தில் புகுந்தார்கள். இன்னெருரு சகோதரி மீனூட்சியம்மாளை பர்வேயர் ராஜு முதலியாருடைய பெரியப்பாவின் பிள்ளை சிக் கந்தராபாத்தில் பெண்பாடசாலை வாத்தியாராக இருந்த கா. சண்முக முதலியாருக்குக் கொடுத் தார்கள். மீனூட்சியம்மாளுக்குக் கலியாணம் நடக் கும்போதுதான் என்னுடைய பெரியக்காளுக்கும் எனது மாமா குப்பம் சிங்காரவேலு முதலியாருக் கும் கலியாணமாயிற்று. இரண்டு கலியாணங்களும் சித்தூரிலே நடந்தன. இந்தக் கலியாணங்கள் நடந்தது எனக்கு நன்ருக நினைவிருக்கிறது. இது தான் எங்கள் குடும்பத்தில் நடந்த முதல் கலியாண சம்பவம்.

மற்றெருரு தங்கை அபிராமியம்மாளை வயதான மண்டி லோகநாத முதலியாருக்கு நான்காந்தார

மாகக் கொடுத்தார்கள். மண்டி லோகநாத முதலியார் என்பவர் ராவ்பகதூர் பெ. பெ. அண்ணுசாமி முதலியார் ஸி. ஐ. இ. அவருடைய சகோதரர். தமிழிற் பெரும் புலமைவாய்ந்து விளங்கின பெ. லோ. கஜராஜ முதலியாரின் தந்தை. இந்த விவாகத்தின் பயனுக மூன்று பெண்களும் ஐந்து பிள்ளைகளும் பிறந்தனர். ஆயினும் இவரெல்லோரும் ஒருவர் பின்னெருவராக நல்ல வயதெய்தின பிறகு விரைவில் காலகதியுற்றனர். இதைச் சொல்லப் போனல் துன்பமாலையாகக் காணும். எங்கள் மாமாவுக்கு மிகப்பெரிய துயரத்துக்குக் காரணமாக இருந்தவை அவர் தங்கை அபிராமியம்மாளுக்கு நேர்ந்த இந்தத் துன்ப அலைகளே.

கடைசித் தங்கையாகிய சேது அம்மாளைத் தியாமுகச்சேரி என்னும் இடத்திலே ஒரு பழைய உறவினராகிய ராஜு முதலியாருக்கு முதல் தாரமாகக் கொடுத்தார்கள். இந்தம்மாள் இரண்டு பிள்ளைகளையும் ஒரு பெண்ணையும் பெற்றுவிட்டுக் காலமாய் விட்டார்கள். கணவர் ராஜு முதலியார் அவருக்கு முன்பே இறந்துவிட்டார். தாய் தந்தையர் இருவரையும் இழந்திருந்த அந்தப் பெண் குழந்தையை அபிராமியம்மாள் எடுத்துக் கொண்டு போய் வளர்த்து வந்தார்கள். அதற்கு முனிசாமி முதலியாருடைய நன் முயற்சியினலே சென்னையிலே விவாகம் நடந்தேறியது.

மேலே சொல்லிவந்த விவரத்திலிருந்து எங்கள் மாமா எவ்வித உத்தம முறையிலே கிருகஸ்த

தருமத்தை நடத்திவந்தார் என்பது விளங்கும். சென்னையில் கண் ஆஸ்பத்திரியில் சாதாரணமான ஒரு வேலையிலிருந்து கொண்டு, தம்முடைய பாட்டி, மாமன், மனைவி, மக்கள் எல்லோரையும் காப்பாற்றி வந்ததோடு, சித்தூரில் தமது பெற்றோரையும் கவனித்துக்கொண்டு, இத்தனை சகோதரிகளையும் கலியாணம் செய்துகொடுத்து அவர்களுக்கெல்லாம் செய்யவேண்டிய வரிசை வம்மைகளைச் செய்து இன்னும் பல தேவைகளையெல்லாம் குறைவற நிறைவேற்றி முணுமுணுப்பு என்பதே இல்லாமல் தமது இல்வாழ்க்கையை இவர் நடத்தி வந்திருக்கிறார். சுயநலமே கருதும் இக்காலத்திலே இப்படிப் பட்ட மேன்மையான அரவணைப்பும் ஒப்புரவும் காணமுடியுமா ? இவர் தமது கடமையைச் செய்ததுபோல யார் செய்ய வல்லார் ?

## மக்கட் பேறு

சித்தூர் கந்தசாமி முதலியாருக்கு இரண்டு பெண்களும், நான்கு பிள்ளைகளும் பிறந்தார்கள். இவர்கள் எல்லாரிலும் மூத்தவர் சி. க. பார்த்தசாரதி முதலியார். சென்னை இஞ்சினீயரிங் காலேஜில் படித்துத் தேர்ச்சி பெற்று ஓவர்சீயராக வேலை பார்த்து வந்தார். ஈரோட்டில் திடீரென விஷபேதி கண்டு இறந்துவிட்டார். இந்த நிகழ்ச்சி எங்கள் மாமா தமது வேலையிலிருந்து ஓய்வு பெறுவதற்கு முன்பாக நீண்டகால விடுமுறை எடுத்துகொண்டிருந்தபோது ஏற்பட்டது. இது அவர்களுக்குப்

பேரிடி விழுந்ததுபோலச் சம்பவித்தது. மாமாவின் பிற்கால முழுவதும் இந்தப் பெருந்துன்பம் அவர் நெஞ்சைவிட்டு அகலவே இல்லை. இந்த மகன் நிரம்ப விவேகமுள்ளவர், கூர்மையான புத்தியுள்ளவர். உத்தம புத்திரன். பெற்றோர் நெஞ்சத்துக்கும் அத்தைமாருடைய நெஞ்சத்துக்கும் மிகுந்த மகிழ்ச்சியையும் ஆறுதலையும் அளித்துவந்தவர். இந்த மகிழ்ச்சி நீடித்திருக்க அவர்கள் கொடுத்துவைத்திருக்கவில்லை. இவருக்கு அபிராமியம்மாளின் மகள் பாப்பாத்தியம்மாளைக் கொடுத்திருந்தது. இவர்களுக்குப் பங்கயச்செல்வி என்று ஒரு குழந்தை பிறந்திருந்தது. இவர் இறந்தபிறகு அந்த இருவரும்கூட பரமபதமடைந்தனர்.

மூத்த மகள் ஸ்ரீமதி. எதிராஜம்மாளைத் தமது சொந்த மைத்துனர், மனைவியின் சகோதரர், வே. கோ. கோவிந்தராஜு முதலியாருக்கு மணஞ்செய்து கொடுத்தார். இவர் ஓவர்சீயராக இருந்து ஓய்வு பெற்று, கோபிசெட்டி பாளையத்தில் வசித்து வந்தார். மற்றொரு பெண்ணைத் தமது தங்கை மீனாட்சியம்மாளின் மகன் சிக்கந்தராபாத் கா. ச. கிருஷ்ணசாமி முதலியாருக்குக் கொடுத்தார். நான்கு பிள்ளைகளும் இரண்டு பெண்களும் பெற்றுவிட்டு அந்தம்மாள் காலகதியாயினர்.

இரண்டாவது மகன் திரு சி. க. வாசுதேவ முதலியார். இவருக்குத் தங்கவேலு முதலியார் மகளை விவாகம் செய்திருக்கிறது. இவர் தமது தகப்பனார் வாழ்ந்து வந்த இல்லத்திலே வசித்து வருகிறார்.

அடுத்தவர் திரு சி. க. கேசவ முதலியார். இவருக்கும் ஆர்க்காடு கங்காதர முதலியாரவர்களுடைய இளைய குமாரத்திக்கும் விவாகமாயிருக்கிறது. இவருக்குச் சென்னை கல்வி இலர்கா டைரக்டர் ஆபீசில் உத்தியோகம். எல்லாருக்கும் இளையவரான திரு சி. க. ஸ்ரீநிவாஸ், பி.ஏ.(ஆனர்ஸ்) சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் உடற்பயிற்சி டைரக்டராக இருந்து வருகிறார். இவருடைய மனைவி நெல்சன் கம்பனியாராகிய தருமசீலரான மாணிக்க முதலியாருடைய மூத்த மகள் ஆவார்.

## எங்கள் மாமா வாழ்க்கையில் ஒருநாள்

சித்தூர் கந்தசாமி முதலியார் தமது தினசரி வாழ்க்கையை மிக்க நியமத்துடனும் ஒழுங்குடனும் நடத்திவந்தார். அதிகாலையில் எழுந்து கடவுள் வழிபாடு செய்து வெண்மையான தூய உடையணிந்து வேலைக்குப் புறப்படுவார். வெண்மையான மெல்லிய ஆடை அணிவார். வெண்மையான லாங்கிலாத்து ஷர்ட், அதன்மேல் வெண்மையான கோட் போட்டிருப்பார். வெண்மையான மல் தலைப்பாகை இருக்கும். குமரகுரு என்னும் ஜோசியர் கொடுத்த ஒரு தாயத்து கட்டிக் கொண்டிருப்பார். அதிகாலையில் நேரத்தோடு எழும்பூர் கண்ணாஸ்பத்திரிக்குப் போய்ச் சேர்ந்துவிடுவார். தமது வேலையைச் சுறுசுறுப்புடன் திறமையாகச் செய்வார். தமது மேலதிகாரிகளாகிய கர்னல் டிரேக் பிராக்மன்,

கர்னல் போப் (இவர் திருக்குறள், திருவாசகம் நாலடியார் முதலிய நூல்களை ஆங்கிலத்திலே மொழிபெயர்த்தவரும் தமிழ் மாணவன் என்று தம்மைச் சொல்லிக்கொள்ள விரும்பினவருமான உயர்திரு ஜி. யு. போப் ஐயரின் மகன்), கர்னல் எலியட் என்ற சிறந்த கண் வைத்தியர்களுடைய நம்பிக்கையும் நன்மதிப்பும் பெற்றவராகித் தமது பணியை ஆற்றிவந்தார். வேலை மிகுதி, தூரத்தில் வீடு, வெயில் கொடுமை : ஆதலால் ஆஸ்பத்திரிக்கே பகல் உணவைத் தருவித்துக்கொள்ளுவார். மாலையில் வேலைமுடிந்து வீடுநோக்கி நடந்து வருவார். இந்தவிதமாக ஒரு நாளைப்போல, தமது வாழ்நாள் முழுவதும், விடுமுறை யென்பதே எடுக்காமல், பாடுபட்டு உழைத்துக் கௌரவமாக ஓய்வுபெற்றார். ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் அவர் பகலில் பதினொரு மணிவாக்கில் வீட்டுக்கு வந்துவிடுவார். மாலை நேரங்களில் அவர் வீடுவந்து சேர்வதற்குச் சரியாக நண்பர்கள் வருவார்கள். இராயப்பேட்டை ராமலிங்கம் தெருவிலிருந்த நாராயணசாமி நாயுடு என்பவருடன் இவருக்குத் தோழமை அதிகம். இவர்களிருவரும் "தியாசபிஸ்ட்" என்னும் பிரம்ம ஞான சங்கத்தின் வெளியீட்டைப் படிப்பார்கள். அக்காலம் கர்னல் ஆல்காட் என்னும் பெரியார் திகழ்ந்த காலம். மயிலாப்பூர் சாலையிலிருந்த தோட்டத்திலே லண்டன் துரைசாமி நாயுடு நடத்திவந்த பிரம்மஞான சங்கக் கிளைச் சபைக்குப் போவார்கள். கல்கத்தாவில் வெளியாகும் அமிர்தபசார் பத்திரிகை

யின் வாரப் பதிப்பை எங்கள் மாமா வரவழைத்து வந்தார். அதை இருவரும் ஊக்கமாகப் படிப்பார்கள். இந்து பத்திரிகையையும் ஒழுங்காகவும் விடாமலும் படித்து வருவார்கள். அப்போது அதற்கு ஆசிரியர் பெயர்பெற்ற ஜி. சுப்பிரமணிய அய்யர்.

தமது சொந்த வாழ்க்கை அனுபவங்களிலிருந்தும் நூல்களேயும் பத்திரிகைகளேயும் படிப்பதிலிருந்தும் தமது சிந்தனையிலிருந்தும் தமக்குத் தோன்றின விஷயங்களேக் குறித்து இந்த இரண்டு நண்பர்களும் அடிக்கடி பேசிக்கொள்ளுவார்கள். பல கேள்விகளேப்பற்றிச் சுவைபடத் தங்களுக்கு இயல்பான சுதந்திர முறையிலே இருவரும் வாதிப்பது கேட்பதற்கு வேடிக்கையாகவும் இருக்கும்; அதோடு அறிவையும் புகட்டும். மனிதரைப்பற்றியும் உலக விவகாரங்களேப் பற்றியும் நிறைந்த தெளிவான அறிவு மாமாவுக்கு இருந்தது என்பதை இந்தப் பேச்சுக்கள் நன்ருகப் புலப்படுத்தின. இந்தவிதமாக எங்கள் மாமாவின் தினசரி வாழ்க்கை நடந்து வந்தது. இவையெல்லாம் நான் நேராக என் கண்கூடாகக் கண்டவை.

## அன்புடைய மாமனும் மாமியும் நீ

மேலே சொல்லி வந்த விஷயங்களே அறிந்து கொள்வதற்கு எனக்குச் சமயம் வாய்த்தது எப்போதென்ருல் நான் படிப்பதற்காகச் சென்னேக்குப் போயிருந்த காலத்திலே. இந்தக் காலமே என் வாழ்

நாளிலெல்லாம் மிகச் சிறந்த காலமாகும். எனக்குப் பன்னிரண்டு வயதானபோது 1888 ஆம் ஆண்டிலே சென்னைக்குப் போய் 1891 வரையில் அங்கு இருந்தேன். அப்போது எங்கள் மாமா வீட்டில்தான் இருந்து வந்தேன். அவர்கள் விநாயகம்பேட்டை நல்லண்ண முதலித் தெரு 26-ஆவது எண்ணுள்ள வீட்டில் வசித்துவந்தார்கள். மாமா என்னைப் படிக்க வைப்பதற்கு விசேஷமான சிரத்தையெடுத்துக் கொண்டார். பெருத்த உதவி செய்தார். எனக்கு இத்துணை உதவி செய்வதற்கு என்னிடம் வைத்திருந்த அன்பு மட்டுமன்றி, இவர் எனது தாயாராகிய தமது தமக்கையாரிடம் வைத்திருந்த அன்பும் காரணமாகும். இது எப்படித் தெரிகிறதென்ருல் என் தகப்பனுர் முதுமையுற்ற காலத்திலே இவர் என் தாயாருக்குச் செய்துவந்த உதவியினுலும் காட்டிவந்த பரிவினுலும் தெரிகின்றது. நான் பள்ளிக்கூடப்பாடங்களைப் படிப்பதையும் கையெழுத்து எழுதுவதையும் கவனித்துவந்தார். இவர் ஒரு தடவை என்னை அடித்தது எனக்கு நினைவிருக்கிறது. அப்போது எங்கள் மாமியும் அங்கு இருந்தார்கள். அடிக்கவேண்டாமென்று தடுத்தார்கள். என் கையெழுத்து நன்ருகவே இல்லை. நான் அதைத் திருத்திக் கொள்வதற்குக் "காப்பி" எழுதவில்லை என்று அடித்தார். அது என்னுடைய நன்மையைக் கருதியே செய்ததாகும்.

பாடங்களைத் தவிரப் பொது அறிவு எனக்கு உண்டாவதற்கும் மாமா முயன்ருர். முன்னே

குறித்த லண்டன் துரைசாமி நாயுடுவின் லாட்ஜுக்கு நான் போவதற்கு உத்தரவு அளித்தார். அங்கு "தியாசபிஸ்ட்" என்னும் பத்திரிகையை நான் படிப்பேன். இதனால்தான் பிரம்மஞான சங்கத்தின் கொள்கைகளிலும் போதனைகளிலும் எனக்கு இளமையிலேயே விழைவு உண்டாயிற்று. மாமாவுக்கு வரும் மற்ற பத்திரிகைகளையும் பார்ப்பதுண்டு. மாமாவும் அவர் நண்பரும் பல உலக விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பதையும் நான் கேட்பதுண்டு.

என்னிடத்திலிருக்கும் கல்வி விருப்பத்தைப் பற்றி பெருமை கொள்ளுவதாலும், சிறிதளவு கல்வியைப் பற்றித் திருப்தியடைவதாலும் அந்தக் கல்வியைப் பெறுவதற்கும் கல்வியில் விருப்பங் கொள்வதற்கும் மாமாவே காரணம். என்னுடைய வாழ்க்கையானது ஏதோ ஒரு நல்ல விதத்திலே, ஒரு திறத்திலே நடந்து வந்திருப்பதாயின் அந்தத் திறத்திற்கும் நல்ல விதத்திற்கும் மாமாவே காரணம். அவர் என்னை இளமையிலே பழக்கின முறை என்னை ஆளாக்கி இதுகாறும் எனக்கு உதவி வந்திருக்கின்றது. மாமா செய்த இந்த நன்மையோடு ராயப்பேட்டையிலே என் பாட்டியாரும், நாங்கள் குடியிருந்த வீட்டுக்குச் சொந்தக்காரராகிய சண்முகம்மாள் என்பவரும் மிக்க கருத்தோடு என்னை வளர்த்து வந்தார்கள். இந்த மூவரும் காலத்தினாற் செய்த நன்றியை நான் என்றும் மறவாமல் நன்றியறிதலோடு நினைத்து வருகின்றேன்.

## மாமா எழுதின கடிதங்கள்

1892-ஆம் ஆண்டில் நான் சென்னையிலிருந்து பெங்களூருக்குத் திரும்பி வந்தேன். 1893-ல் வேலையில் அமர்ந்தேன். 1898-ல் எனக்கு விவாகம் நடந்தது. சுமார் நாற்பது ஆண்டுகள் உத்தியோக மென்னுஞ் சகடம் பூண்டு அதை உய்த்துவந்தேன். வாழ்க்கைப் பெருங்கடலிலே நிகழும் புயலிலும் சுழியிலும் சிக்கி மோதுண்டு உழன்று அவற்றோடு போராடி, உழைத்து வந்திருக்கிறேன். நான் பருகும் கிண்ணத்திலே துன்பம் நிறைந்து வழிந்தோடிற்று. கடவுள் எனக்குப் பொல்லாத துயரமாகிய உணவை மிகுதியாகவே அருத்தியிருக்கிறார். எத்தனையோ ஏமாற்றங்கள் என் வழியிலே குறுக்கிட்டன. என் அன்புள்ள தாயார் மூன்று ஆண்டுகள் மனத்தடு மாற்றத்தினாலே சொல்லமுடியாத துன்பத்தை யனுபவித்து இறந்தது எனக்கு உண்டான முதல் துயரம். பிறகு எனக்கு நன்மை செய்பவரும் என் நன்மையை விழைபவருமான என் மாமனார், என் மனைவியின் தந்தையாகிய ஆரணி முனிசாமி முதலி யார், பெரும்பிரிவெய்தினார். இவ்வாறு என் சுமையைச் சுமந்துகொண்டு ஓய்ந்த நடையுடன் வாழ்க்கைப் பயணத்தைச் செய்து வரும்போது எனக்குப் பெரிய ஆறுதல் அளித்து வந்தவர் என் அன்புடைய மாமா. அவ்வப்போது இவர் எனக்குக் கடிதம் எழுதுவார். இவருடைய சாந்தமான, எளிய, மறையெனல் அறியாத, மாயமில்லாத உள்ளத்தி

லிருந்து எழும் நேர்மையான வாசகம் நிறைந்த அந்தக் கடிதங்கள் பொன்போன்ற புத்திமதி நிறைந்தவை. கருத்திலே உதிக்கக்கூடிய ஒவ்வொரு விஷயத்தையும் பற்றியவை. வீட்டு விஷயங்கள் உத்தியோக விஷயங்கள் முதலிய எல்லாம் அடங்கியவை. ஒரு கடிதத்திலே எளிய வாழ்க்கை வாழ்ந்துவா என்று சொல்லியிருப்பார். இன்னொன்றில் கடன்களையெல்லாம் கொடுத்துத் தீர்த்துவிடு என்று எச்சரித்திருப்பார். இப்படி இவர் எழுதிவந்த கடிதங்கள் எனக்கு ஆறுதலைத் தந்தன. வழிகாட்டின.

தமது தமக்கையார் மகனாகிய என் மீது தந்தை மகனிடத்து வைப்பதுபோல எவ்வளவு அக்கரை வைத்திருந்தார், என் நலத்தை எவ்வளவு கோரியிருந்தார், என் விஷயத்தில் எவ்வளவு பெருங்கவலையும் ஆவலுங்கொண்டிருந்தார் என்பதைக் காட்டும் நல்ல சான்றுகள் ஆகும், இந்தக் கடிதங்கள்.

ஞானியின் உபதேசமொழிகள் போன்ற இவரது சொற்களை, என் தளர்ந்த நெஞ்சு உரமடையும் வண்ணம் ஊக்கும். இவரது பொன்னுரைகளைக் கண்ணுறும் என் நண்பரெல்லோரும் ஆச்சரியமடைகின்றனர்.

அப்பால், எங்களுக்கு நேர்ந்த துன்பங்கள் எல்லாவற்றிலும் பெரிதான துன்பம் நிகழ்ந்தது. அதுவே எங்கள் குடும்பத்திற்குப் பேரிடி. அது தான் எங்கள் காதல் மருமகனாகிய டாக்டர் சாம்பசிவம் அவர்களின் அகால மறைவு. எங்கள் நம்பிக்கையெல்லாம் நாங்கள் அவரிடத்திலே இட்

டிருந்தோம். எங்கள் உயர் நோக்கங்களெல்லாம் அவரிடத்திலேயே நாங்கள் வைத்திருந்தோம். இந்த ஆற்றவொண்ணாத துயரம் போதாதென்று தெய்விகத் தன்மை பெற்ற எங்கள் மகள் சந்திர சூடாமணியும், தசரத குமாரனைப் போலக் கடனறிந்தொழுகும் மகன் ராமச்சந்திரனும் எங்களைப் பரிதவிக்க விட்டு அகன்றனர். என் வாழ்வின் மாலைக்காலத்திலே இந்தப் பெருந் துன்பங்களையெல்லாம் நன்றுங்கால் நல்லவாக் காண்பவர் அன்றுங்கால் அல்லல் படுவதெவன் என்று பொறுமையோடும் அமைதியோடும் சகித்துக் கொண்டுவருகிறேன். இப்படி நான் நடந்து வருவதற்கு முக்கிய காரணம் எங்கள் மாமா எனக்கு இளமையில் செய்வித்த பழக்கங்களும், பிறகு அவர் எனக்கு எழுதி வந்த உபதேசங்களுமே என்பது என் உறுதியான நம்பிக்கை. என் மாமா அவர்களிடம் எனக்குள்ள நன்றியறிதலையும் அன்பையும் காட்டுவதற்கு அவர் எழுதின கடிதங்களைத் தொகுத்து என் குடும்பத்துக்கு ஒரு பிதிரார்ஜிதமாகச் சேமித்து வைப்பதை விடச் சிறந்த வழி வேறொன்றுமில்லை.

நான் பெங்களூருக்கு வந்துவிட்ட பிறகும் எங்கள் மாமாவைக் காண்பதற்கும் அவரோடு அளவளாவுதற்கும் குடும்ப விஷயங்களைக் குறித்து யோசனை கேட்பதற்கும் பல சந்தர்ப்பங்கள் நேர்ந்தன. நான் சென்னையில் படித்துவரும்போது அவர் தமது நண்பர்களுடன் பல பொருள்களைக் குறித்துப் பேசுவார் என்று சொன்னேன். அப்போது

அவரது பேச்சுத் திறத்தையாவது அந்தப் பேச்சில் புலப்படும் அறிவுத் திறத்தையாவது உணர்ந்து கொள்ளக்கூடிய அறிவு முதிர்ச்சி எனக்கிருந்த தில்லை. ஆனால் நான் பெரியவனான பிறகோ, அவற்றைச் சிறிது உணர்ந்துகொள்ளக் கூடியநிலை வந்த பொழுதோ, அவை எனக்கு மிகுந்த ஆச்சரியத்தை விளைத்தன. உலக விஷயங்களையும் மனிதரையும் பற்றி மிகவும் ஆழ்ந்த அறிவு அவருக்கு இருந்தது என்பதை அவருடைய பேச்சுக்கள் காட்டின. அவருக்கு இயற்கையாக இருந்த நுண்ணறிவும், வாழ்க்கையில் ஏற்பட்ட பரந்த அனுபவத்தின் பயனாக உண்டான உணர்வும், நூல்களையும் பத்திரிகைகளையும் இடைவிடாது படித்து வந்ததனால் விளைந்த ஞானமும் அவரது ஆழ்ந்த அறிவுக்குக் காரணங்கள் என்று நான் கருதுகிறேன். அவர் முக்கியமான பெரிய மனிதர்களைப் பற்றிச் சொல்லும் மதிப்புரைகள் மெத்த நியாயமானவை. மனிதரையும் நிகழ்ச்சிகளையும் அவர் எவ்வளவு நுணுக்கமாகப் பகுத்து அறிந்துகொண்டிருந்தார் என்பதை இந்த உரைகளும் காட்டின. நான் வில்லியம் தாமஸ் ஸ்டெட் என்பவரைப் பெரிதும் மதித்துக் கொண்டாடுபவன். ஸ்டெட் விஷயமாக மாமா என்னோடு நடத்திய வாதங்களும் சம்பாஷணைகளும் மாமாவின் காட்சியின் அகலத்தையும் இதயத்தின் மாட்சியையும் எனக்குத் தோற்றுவித்தன. நான் ஸ்கௌகிராப்ட் என்பவர், பிரகலாதன் என்னும் பீயர்ஸ் என்பவர் முதலிய ஆங்கில நண்பர்க

ளோடு கடிதப் போக்குவரத்து வைத்திருப்பதை அவர் பாராட்டுவார். நான் கைவல்யன் என்றும் திரு ஞானசம்பந்தன் என்றும் அழைத்துவரும் வில்லியம் பெஞ்சமின் கிளீவ் என்பவர் எனக்கு விஸ்தாரமாகத் தத்துவ சம்பந்தமான கடிதங்கள் எழுதுவது வழக்கம். அவர் எழுதின ஒரு கடிதத்தை மாமாவுக்கு ஒரு சமயம் காட்டினேன். அந்தக் கடிதத்தில் எழுதியிருப்பது தனக்கு ஒன்றும் விளங்குவதில்லை என்று சொல்லிவிட்டார். இது மாமாவின் எளிமையான குழந்தைபோன்ற உள்ளத்தையும் அக்குழந்தை தன் தாயினிடம் வைத்திருக்கும் நம்பிக்கை போன்ற அசையாத இயல்பான தெய்வ நம்பிக்கையையும் காட்டுகிறது. திருவள்ளுவர் சொல்லுவதுபோன்ற ஆடம்பரமற்ற சொற்களாலே சொல்லத் தக்கது இவரது தத்துவ ஞானம்.

## திருக்குறளிலே பற்று

எங்கள் மாமாவுக்குத் திருக்குறளிலே மிகுந்த ஆசை. இவர் வி. தா ஸ்டெட் என்பவரைப் போல நன்மை கடைப்பிடி என்னும் நேரிதான மேன்மையான ஒரு வழியைப் பற்றியவர். உண்மை, வாய்மை, மெய்ம்மை என மனமொழிமெய்களால் சத்தியமாக நடத்தலே எல்லா நன்மைகளேயும் எய்துவதற்கு உபாயம் என்று இவர் எண்ணினவர். இப்படிப்பட்ட எளிய நீதிகளை அறிந்து அவற்றின்படி ஒழுகுதலே, ஒழுக முயலுவதே இவருடைய பெற்றோர் சென்ற நெறி. அந்த நெறியிலேயே அவர்கள்

இவரை இளமை தொட்டு நடத்தி வந்தார்கள். இந்த விதமான நோக்கமும் ஒழுக்கமும் உடையவருக்குத் திருக்குறளிலே பற்று உண்டாவது இயல்பே. இவருடைய கருத்துக்கு மிகவும் பொருந்தியதாக இருக்கிறது அந்த நூலின் போதனை.

கற்றதனால் ஆய பயன் இறைவனுடைய நற்றாளைத் தொழுவதே. கற்பவற்றைக் கசடறக் கற்க வேண்டும், அந்தக் கல்விக்குத் தக நன்னெறியிலே நிற்கவேண்டும். பணிவுடையன் இன்சொலன் ஆதலே ஒருவனுக்கு அணி. ஒழுக்கமே விழுப்பந் தரும். ஏதிலார் குற்றம் போல் தங்குற்றம் காண வேண்டும். ஒருவர் செய்த தீங்கைப் பொறுத்துக் கொள்ளுதல் நன்று; அந்தத் தீங்கை மறத்தல் அதனினும் நன்று. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது அன்றே மறப்பது நன்று. இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல். மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம் பழித்த தொழித்து விடின். பிறிதின் நோய் தன் நோய்போல் போற்றுவதே அறிவினான் ஆகும் பயன். எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு. அஞ்சுவது அஞ்சாமை பேதைமை. கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம். சுற்றத்தார் சுற்றப்பட ஒழுக வேண்டும். முயற்சி திருவினை ஆக்கும்; பெருமையுந் தரும். பொறியின்மை யார்க்கும் பழியன்று, அறிவறிந்து ஆள்வினை இன்மைதான் பழி. உள்ளுவதெல்லாம் உயர்வுள்ள வேண்டும். உள்ளத்

தனையதே உயர்வு. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தங் கருமமே கட்டளைக்கல். இடுக்கண் படினும் இளிவந்த செய்யக் கூடாது. ஈன்ருள் பசி காண்பானுயினும் செய்யற்க சான்ருேர் பழிக்கும் வினை. அறத்தான் வருவதே இன்பம். மனத்துக்கண் மாசிலனுதலே அனைத்தறன். அன்பின் வழியதே உயிர்நிலை : என்று இத்தகைய எல்லா உலகமும் எக்காலத்தும் ஒப்பி ஏற்றுக் கொண்டு நடக்கத் தக்க சிறந்த அறநெறியை வகுத்து அதனைச் சிக்கலில்லாத எளிய தெள்ளிய இனிய உயர்ந்த மாண்புடைய சொற்களிலே சொல்லும் திருவள்ளுவரிடத்திலே, ஆடம்பரமற்ற ஆழ்ந்த தெய்வபக்தி, இளங்குழந்தைகளுடைய உள்ளத்தைப் போன்ற கள்ளங்கபடமற்ற சுத்தமான உள்ளம், மெய்யடியார்களது நெஞ்சம் போன்ற மாசற்ற தூயநெஞ்சம் ஆகிய இத்தகைய பண்புடைய இவருக்குப் பக்தி உண்டாவதில் வியப்பு ஒன்றுமில்லை.

## மறைவு

நான் மாமாவைக் கடைசியாக கண்டது 1920ம் ஆண்டு ஜூலை மாதத்திலே. அப்போது என் மூத்த மகள் ராதாபாய் அம்மாளின் கலியாணத்துக்காக பெங்களூருக்கு அவர் வந்தார். அவருக்கு அப்போது வயது அறுபத்தைந்து. இயற்கையாக இருந்த திடமான உடல் தளர்ந்திருந்தது. அவருக்குக் குடல் பிதுக்கம் இருந்து வந்தது. அதற்காக இடுப்பு வரையில் குளிக்கும் முறையை அனுசரித்து வந்தார். ஒரு

சமயம் அவருக்குப் பாரிசவாயு கண்டது. அதிலிருந்து குணப்பட்டெழுந்தார். இப்படித் தமது வாழ்நாளில் ஆறு காவதங் கடந்து ஏழாவது காவதத்திலே ஏழாவது கல்லையும் கடந்து விட்டார். 1922-ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 11-ஆம் தேதி தமது அறுபத்தெட்டாவது வயதிலே எம்பெருமான் சந்நிதிக்கு எழுந்தருளி நித்திய சூரிகளில் ஒருவராய் விளங்கி வருகின்றார். அந்த மாதம் 27-ஆம் தேதி நடந்த சுபஸ்வீகரணத்தின் போது என் அன்பையும் நன்றியையும் தமிழால் சொல்லி என் துயரத்தை ஆற்றிக் கொள்ள ஆசைப்பட்டேன். என் தாழ்மையான காணிக்கையைத் தமிழ்ப் பாவால் செலுத்த உதவி செய்தவர் என் நண்பர் திரு. ச. மு. நாராயணசாமிப் பிள்ளை. அவர் எழுதிக் கொடுத்த பாடல்களை இம்மலரோடு சேர்த்துக் கட்டியிருக்கிறேன்.

எங்கள் கண்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்து வந்த அவரது திருமேனியைக் காட்டாமல் மறைத்துக்கொண்டார். அவருடைய தோற்றத்தைக் காணாமல் எங்கள் குடும்பம் கலக்கமுற்றது. எங்களுக்குப் புத்தி சொல்லும் தலைவர் மறைந்து விட்டார். வழிகாட்டியில்லாமல் நாங்கள் மயங்கினோம். எங்களுக்கு ஊக்கமளித்து வந்த ஊற்று வற்றி விட்டது.

## அவரது பண்புகள்

இவ்வாறுக எங்கள் மாமா சித்தூர் கந்தசாமி முதலியார் என்னும் மகானைக் குறித்து என் மனக் கண்முன் தெளிவாகத் தெரியும் பொருள்களைச்

சுருக்கமாகக் குறித்திருக்கிறேன். இவரை நமது சுபேதார் மேஜர் வேலூர் லட்சுமணப் பெருமாள் முதலியார் நல்லார் ராஜயோகி என்று அழைப்பார். இந்த நல்லார் இரண்டு தலைமுறைகாலம் தமது பெருஞ் சுற்றத்தைக் காத்தும் நடத்தியும் வந்தார். அவர் எங்கள் குடும்பத்துக்கு ஒரு பீஷ்மர்போல இருந்தார். எங்கள் வட்டம் முழுவதுக்கும் நிலைத்த நன்மையைப் பயப்பதான பிரபாவமும் செல்வாக்கும் உள்ளவராக இருந்துவந்தார். அவர் உண்மையாகவே ஒரு அவதாரம் ஆவார். பாக்கியப்பயன் குன்றினவரும் சஞ்சல புத்தியுள்ளவருமான என்னைப் போன்றவர்களுக்கு உண்மையான கிருகஸ்த தருமத்தை நன்மையான வழியில் எவ்வாறு நடத்த வேண்டும் என்பதைக் காட்டுவதற்காகவே அவர் தோன்றினார். உயர்ந்த நோக்கம் உள்ளவரான திருவள்ளுவரே எங்கள் குடும்பத்தில் வந்து பிறந்தாரோ என்று எண்ணும் வகையில் முன்மாதிரியான வாழ்க்கையை நடத்திவந்தார்.

அவரிடத்திலே தீய பழக்கங்கள் ஒன்றும் என்றும் இருந்ததில்லை. விரும்பத்தகாதவையும் அவசியமல்லாதவையுமான ஆடம்பர சுகவஸ்துக்களை அவர் விழைந்ததில்லை. அவர் வயது முதிர்ந்த காலத்து மகாத்மா காந்தியவர்களுடைய நவஇந்தியா (யங் இந்தியா)வை முறையாகப் படிப்பார். காந்தியடிகளுடைய மனோபாவத்தையே தமதாகக் கொண்டு வரலானார். மாமாவின் இயற்கையை அறிந்த நமக்கு இந்த வளர்ச்சி ஆச்சரியத்தைத் தருவதன்று.

அவர் உண்மையிலேயே மகாத்மாவை ஒத்த வகையினர். தூயவாழ்க்கையில் விருப்பமுள்ளவர். உள்ளத் துறவு பூண்டவர். தவவொழுக்கத்திலேயே ஒழுகுபவர். அவர் பேசுவதிலும் எழுதுவதிலும் கூட நேர்மையும் எளிமையும் ஆடம்பரமின்மையும் விளங்கும். அவரிடத்தில் வஞ்சம் என்பதே கிடையாது. மனத்தில் எப்படி நினைத்தாரோ அப்படியே சொல்லுவார். எளிதாகவே பேசுவார். அலங்காரத்தை விரும்பார்.

அவரை அணுகுவதும் அவரோடு ஒருமுறை பேசுவதும் நமக்கு வலிமையைப் பெருக்கும் ஒரு அமுதம்போல இருக்கும். நமது உயிரைத் தளிர்ப்பிக்கும். அவர் அவ்வப்போது நிகழும் நிகழ்ச்சிகளைக் குறித்துத் தமது மக்களோடும் மருமக்களோடும் உரையாடுவதும், சொற்போரிடுவதும் கேட்போருக்கு மிகவும் ஆனந்தமாக இருக்கும்; அறிவூட்டுவதாகவும் இருக்கும். மெய்யன்போடு அவர் செய்யும் உபதேசங்களும், விண்ணப்பங்களும் கேட்போரது நெஞ்சிலே பசுமரத்தாணிபோலப் பதியும்.

நிர்மலமானதும் மிக்க சாந்தம்பொருந்தியதுமான அவரது முகத்தை என் மனக்கண் காணுந்தோறும் காணுந்தோறும் தமது உறவினருக்கு நியாயங்களையும் சமாதானங்களையும் எடுத்துரைக்கும்போதும், நல்ல ஆலோசனைகளையும், புத்திமதிகளையும் கூறும்போதும் அவர் இருந்த தோற்றத்தை என் மனத்தில் எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் சித்தூர் நரசிம்மதாசர் என்னும் மகரிஷிகளுடைய மாணவரா

கிய மேஸ்திரி ஆறுமுக முதலியாரின் மகன் சித்தூர் கந்தசாமி முதலியார் என்னும் உடலமாகிய உடையைப் போர்த்து இந்தத் துன்ப உலகிலுள்ள உயிர்களைக் காந்தம் இரும்பை இழுப்பதுபோல இழுத்து அவற்றிற்கு நன்மை செய்துவந்த அந்த ஆவி தெய்வீகமானதும் பரிசுத்தமானதும் அன்புமயமானதுமான மகத்தான ஆன்மா என்று நான் உணர்கின்றேன். அந்த ஆன்மா என்றென்றும் எனக்குக் குருவாக விளங்குகிறது. அந்த ஆன்மா தாங்கியிருந்த திருவுருவத்தின் படம் என் முன்னே நிற்கின்றது. நான் தளர்ந்த போதெல்லாம் என்னைத் தாங்கி எனக்கு மனவெழுச்சியைத் தந்து அந்தத் திருவுருவப்படம் எனக்கு ஊக்கமளித்து வருகிறது. அந்த ஞானியின் உருகு பரமசுக வுல்லாச நோக்கும், திருமுகமும் புன்முறுவல் தேசும் என் அகக்கண்ணை விட்டு அகல்வதேயில்லை.

## எங்கள் மாமி

எங்கள் மாமா அவர்களுடைய காதல் மனைவியார் ஸ்ரீமதி அங்கம்மாள் என்னும் விருத்தாம்பாள் அம்மாள் இவருக்குப் பிறகு இருபத்தொரு ஆண்டுகள் இந்நிலவுலகில் இருந்தார்கள். 1943 ஆம் ஆண்டு ஜூலைமாதம் 2ம் நாள் ராயப்பேட்டையில் தமது கணவர் வீட்டில் தமது மக்களும் மருமக்களும் சூழ்ந்திருக்க நித்திய சூரிகளின் திருக்கூட்டத்திலே தமது கணவரோடு சேர்ந்து பரம்பொருளைத் துதித்து நிற்கச் சென்றார்கள். தமது வாழ்நாளெல்

லாம் உண்மையாகவே தமது குடும்பத்துக்காக உழைத்தார்கள். கணவருடன் பிறந்த ஏழு சகோதரிகளேயும் அவர்கள் மக்கள் மருமக்கள் ஆகிய மிகவும் பரந்த பெருஞ் சுற்றத்தையும் அன்போடு தழுவித் தொந்தரவில்லாமல் நயமாகக் குடும்பத்தை நடத்திவந்தார்கள். இவர்கள் எங்கள் குடும்பங்கள், உறவினர்கள் முதலியோர் கூடும் சமயங்களிலெல்லாம் எல்லோருடைய அபிமானத்துக்கும் வணக்கத்துக்கும் நாட்டத்துக்கும் இலக்காக இருந்தவர்கள். இந்தப் பெண்மணி இல்லாமல் எந்தக் குடும்ப விசேஷமும் நிறைவு பெருது. குலத் தலேவரான தமது கணவருடைய பிரதிநிதிபோல எல்லா விசேஷங்களுக்கும் பெங்களூரெங்கே, சிக்கந்தராபாத் எங்கே, கோபிச்செட்டிபாளயம் எங்கே, இவர்கள் பிரயாணம் செய்யப் பின்வாங்காமல் புறப்பட்டுச்சென்று அவ்விசேஷங்களேச் சிறப்பித்து வருவார்கள். சிறப்பாக நடப்பித்தும் வருவார்கள். இவர்களுக்கு இருந்த அனுபவம் மிகப் பரந்தது. குடும்பத்தைக் கட்டுக்குள் வைத்து நடத்துவதில் இவர்கள் அதிசமர்த்தர். இவர்களுடைய அதிகாரத்தின் ஒளி நமது குடும்பங்கள் எல்லாவற்றிற்கும் பெருத்த நன்மையைச் செய்து வந்தது. இவர்கள் எப்பொழுதும் சந்தோஷமும் உற்சாகமும் பொருந்திய குணமுள்ளவராக இருந்தார்கள். இவர்கள் முகத்தில் விளக்கமான புன்சிரிப்பு நிலவிக்கொண்டே இருக்கும். இவர்களிடத்தில் இயற்கையாக உண்டாகும் கலகல என்ற சிரிப்பும், கேலியும், பிரிய

மாய்ப் பேசும் பேச்சும் எல்லோரையும் இவர்க ளோடு பிணித்துவிடும். இந்தச் சிரிப்பையும்.கேலி யையும் பேச்சையும் எங்கள் குடும்பங்களிலே நடந்துவந்த கணக்கில்லாத சுபசோபன சமயங்களி லெல்லாம் கேட்டிருக்கின்றோம். அந்தப் பழைய நினைவுகளும் இன்பக் கூட்டுறவுகளின் ஞாபகமும் உண்டாகும்போது இவர்களது சிரிப்பும் பேச்சும் திரும்பவும் உயிர்பெற்றெழுந்து எங்கள் காதுகளில் ஒலிக்கின்றன. எங்கள் மாமாவைப் போலவே இவர்களும் அந்தப் பழைய தலைமுறையாகிய வலிமையும், எளிமையும், தெய்வபக்தியும் நிறைந்த குலத்துக்கே சேர்ந்தவர்கள். அப்படிப்பட்டவர் களின் எண்ணிக்கை இக்காலத்தில் மிகவும் குறைந்து வருகிறது. இவர்கள் கபடம் என்பதறி யாத மாயமில்லாத பழங்கூட்டத்தார்கள். இவர்கள் எல்லோரிடத்திலும் ஒரேபடித்தாக அன்பும் வாச் சல்லியமும் காட்டுவார்கள். மற்றவர்களுக்காக உழைப்பதற்குச் சற்றும் பின்வாங்காத தன்னலமற்ற தகைமை மிக்கவர்கள். அதிசயமான ஒத்துழைப் பும் கூட்டுறவு முயற்சிகளும் உள்ளவர்கள். குடும்ப முழுவதிலும் அவரவர்களுக்கு ஏற்பட்ட இன்ப துன்பங்களைத் தாங்கள் பகிர்ந்துகொண்டு தங்களை எல்லோரும் அவசியமாக வேண்டியவர்கள் என்று கருதி விரும்பியழைக்கும்படி நடந்துகொண்டவர் கள். இவர்களுடைய ஒளிவளர் விளக்காகிய ஆன்மா சாந்தத்தில் நிலைத்திருப்பதாக.

## அனுபவ மொழிகள்

எங்கள் மாமா அவர்கள் அனுபவ மொழி களில் சிலவற்றை இங்குத் தருகின்றேன். மீகாமன் கடலிலே மரக்கலத்தைச் செலுத்து வதற்கு உதவும் படம் போல நாம் நமது வாழ்க் கையை நடத்துவதற்கு அவரது மொழிகள் வழி காட்டும்.

அவசியமில்லாத விஷயங்களுக்காகப் பணத்தை வீண்செலவு செய்யாதே.

ஒவ்வொருவரும் அவரவர் பணத்தையும் பொருளையும் எப்படிப் பயன்படுத்தினர் என்பதைக் குறித்துக் கடவுளுக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண் டும். நாம் சம்பாதிப்பது நம்முடையதன்று.

கடவுளிடத்திலே நமது முழு நம்பிக்கையை வைப்பதைக் காட்டிலும் அனுகூலமும் ஆறுத லும் பெறுவதற்கு வழி வேறொன்றும் இல்லை. அவரே ஒவ்வொருவருக்கும் மிகுந்த நன்மை விளை யும்வண்ணம் விதிப்பவர். அந்த நன்மையாகிய ஆக் கத்தைத் தருபவரும் அவரே.

வலிமையற்றவர்களும் வறுமையுற்றவர்களு மான பிறருடைய நலத்தைக் கருதி யாரொருவர் உழைக்கின்றார்களோ அவர்கள் தாம் பாக்கியவந்த ராக இருக்கலாம். கருமத்தினாலே மொத்துண்டு அலைக்கப்படும் மற்றவராகிய நாமோ துன்பத்திற்கே ஆளாவோம். இந்தத் துன்பம் உடலைப்பற்றியதாக லாம்; உள்ளத்தைப்பற்றியதாகலாம்.

. சமாதானமாக வாழ்வதற்கு வழி நாமிருக்கும் நிலை எதுவானாலும் அதிலே மனம் பொருந்தி இருப்பதே ஆகும்.

## முடிவுரை

இவ்வாறு எனக்குக் கிடைத்த சில ஆதாரங்களையும், என் நினைவிலே இருந்தவைகளையும், என் மனதிலே பட்டவைகளையும் கொண்டு எங்கள் மாமா சித்தூர் கந்தசாமி முதலியாருடைய மாசுமறுவற்ற வாழ்க்கையிலே எனக்குப் புலனான குணங்களையும் விசேஷங்களையும் ஒருவாறு சுருக்கமாக எழுதியிருக்கிறேன். பயன் மிக்க அவரது நீண்ட வாழ்நாளிலே நடந்த பல சங்கதிகள் எனக்குத் தெரியாதவை. அவரது இளமை, யௌவனம், திருமணம், முதுமைப் பருவம் இவற்றைக் குறித்துச் சொல்வதற்கு அவருடைய தினசரிக் குறிப்பையும் அவருடைய குடும்ப வரலாற்றுக் குறிப்புக்களையும் பார்த்தால்தான் முடியும். இந்த வேலையைச் செய்வது அவருடைய பிள்ளைகளால் தான் ஆகக் கூடியது. நான் அவரோடு இத்தனை ஆண்டுகள் உடனுறைந்தும், மிகவும் நெருங்கிப் பழகியும் அவரை நன்றாக அறிந்து வந்ததன் பயனாக எனக்குத் தோன்றியவற்றுள் சிலவற்றை இங்கு குறித்திருக்கிறேன். இதைக் குறித்து வைப்பதின் நோக்கம் என்னவென்றால் நான் அவரைப் பின்பற்றி இந்த உலகத்தை விட்டுச் சென்ற பிறகும் எங்கள் சுற்றத்தார் அவரைப் பற்றிய இந்த உண்மைகளை மறந்து விடாமல், இழந்து

விடாமல், நினைப்பில் வைத்துக் கொள்ளவேண்டும், அவரைப் போல நடக்க முயலவேண்டும் என்பதே யாம். அவர் மிகவும் சிறந்த மகன், உடன்பிறந்தார், கணவன், தந்தை, குடும்பத் தலைவர், நண்பர், அறிவு சொல் மந்திரி, தத்துவம் உணர்த்தும் ஞானி, நல்ல அயலார், உயர்ந்த பிரஜை. இப்படிப்பட்டவரைக் காண்பது மிகவும் அரிது. இவர் மிகச் சிறந்த முறை யிலே இல்வாழ்க்கையை நடத்தினர். அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின், புறத்தாற்றில் போஒய்ப் பெறுவதெவன். அவருடைய வாழ்க்கையைப் பின் பற்றி அவர் வாழ்ந்ததுபோல நாமும் வாழ்வோமாக, வாழ முயல்வோமாக.

ஆ. துளசிங்க முதலியார்.

*20—7—1943.*

சுபம்

சித்தூர் நரசிம்ம தாஸரின் சீடர்களில் ஒருவராம் ம-ா-ா-ஸ்ரீ
சித்தூர் ஆறுமுக குரு அவர்கள் புத்திரர் ம-ா-ா-ஸ்ரீ
சித்தூர் கந்தசாமி முதலியார் அவர்கள்
1922ஆ டிசம்பர்மீ 11உ சிவபதவியடைந்ததை
முன்னிட்டு நிறைவேறிய சுபஸ்வீகாரணத்தன்று அவரது
மருகர் ம-ா-ா-ஸ்ரீ ஆர்க்காடு துளசிங்க முதலியார்
(Asst. Comptroller of Accts. Mysore Govt.)
அவர்கள் கூறிய

# விதேகமுத்தி சாதனம்

## காப்பு வெண்பா

பூமகளிர் நாதனொடு பூவரைசேய் தேவறிஞர்
நாமகளின் காதலனும் நாதவிந்து—மேமயினல்
பேதமுக பேதமுமாய்ப் பேசிரண்டிற் றேகமெனும்
போதவுரு வத்திபதம் போற்று.

## அறுசீர் விருத்தம்

1. உலகமித் தன்மைத் தென்று
முண்மையை யறியா மாக்கள்
பலமுறு பிறப்பி னல்லற்
பறித்திட வெல்லா முள்ளான்
நலமுறு மாசா னக
நண்ணுவ னென்னு மாற்றம்
நிலவிட வினைநெ ருங்கா
நிராசையா னோன்பு கொண்டு

2. புரையினை யகற்றிச் சேர்ந்தோர்
புனிதராம் மார்க்கந் தந்தோன்
கரையெனு முத்தி யாகுங்
கைவல்ய நிலையன் பால
னுரையினைக் காக்கத் தூணின்
றுயரிரு வடிவ மேற்றுத்
தரைபுகழ்ந் தேத்த நின்ற
தகையவ தார மூர்த்தி (நரசிம்ம)

3. தாசனென் நாமங் கொண்ட
தன்னியன் சீட னாகி
வாசகன் மருக னெந்தை
மயிலவன் பேர்க ளொன்றில்
மோசமத றுக்கு மாறு
முகப்பெயர் தரித்த சீலன்
வாசநற் கட்ட டங்கள்
வகுபணி சித்தூர் வாசன்

4. ஆன்றிய தவத்தால் வந்த
வாறொடு விருசேய் தம்மில்
சாற்றிடுந் துவித னாகி
சப்தசோ தரிக ளோடு
ஏற்றவென் னம்மா னாகி
யிளம்பிறை கங்கை வேணி
போற்றிடுங் கந்தஸ் வாமி
பொருந்திய நாமந் தாங்கி

5. கலையுர மாகக் கற்று
கண்வைத்ய சாலை ஸ்டுவர்ட்
நலமுறும் லிகித னாகி
நகையற மாகு மில்லம்

பலமுற நடத்தி யாறு
பண்பமர் மக்க ளீன்று
குலவிட பென்ஷன் பெற்றுக்
கூடுவிட் டகன்ற மாமா !

6. அடியனேன் தேறும் வண்ண
மருங்கலை கற்றுச் சில
நடையொடு மறிஞர் கூட்ட
நாடொறு மெய்தி ஜென்ம
மடையயன் பெற்று சச்சி
தானந்த வத்து நாடி
யிடையரு தின்பங் கூடற்
கிதுநெறி யென்ப தோர

7. வேண்டிய மார்க்கங் காட்டும்
வித்தக குருவைப் போலும்
மீண்டரு மில்வாழ்க் கைக்கு
மேற்றவை பலபோ தித்து
மாண்டரு டந்தை போலு
மமர்ந்தகண் மணியே மாமா
காண்டரு நின்மு கத்தைக்
காண்பது மெந்த நாளோ

8. அருந்துணை கோலுமில்லா
வந்தகன் போலு மானேன்
தருந்துணை தருவு மில்லா
தளர்கொடி யானுள் மாமி

திருந்துநின் முகங்கா ணாது
தெருமரல் உழந்தார் மக்கள்
தருந்துயர் தமர்களாழ்ந்தார்
சகித்திடாப் பிரிவா லன்றோ. *

உடல் பொய்யுறவு

அறிவினறி யாமையிற் றறிவாய் நின்று
பிறிவறவா நந்தமயம் பெற்றுக்—குறியவிழ்ந்தா
லன்றைக் குடல்வேண்டே னையாவிவ் வாக்கையையே
யென்றைக்கும் வேண்டுவனே யான். —தாயுமானவர்

*பெங்களூர் சூளை ஸ்ரீபிரஹ்ம வித்யாதன சபையினர் பாடியனுப்பினது.

# தோத்திரப் பாடல்கள்

## ஸ்ரீ வேமனானந்த சுவாமிகள் துதி

### சித்தூர் சுவாமி நரசிம்மதாசரவர்கள் இயற்றியது.

ஓங்கார சூத்திர சதானந்த வாரியில்
ஓரெழுத் தான பரனே
ஓரியாய் நீயெனக் கஞ்செழுத் தொருசெவியில்
ஓதிவைத் தவனல் லவோ
ஆங்கார மற்றுசுக மற்றுதுக் கமுமற்றோர்
ஐம்புலன் பாச மற்று
ஆகாசம் கிடுகிடென் றிடியிடித் தமுதமழை
ஆரூத ரத்தில் பொழிய
ரீங்கார நாதமுனி விந்துவுக் குள்ளாகி
இரவிச்சி புருவ நடுவின்
இரதிமன் மதனென்ன விளையாடு வதுகண்டு
இராகமிட் டுனது முன்னே
வீங்காமல் நின்றுனது திருவடியின் மகிமையினை
விகசிப்ப தெக்கா லமோ
வேதாந்த பரமசிவ மெய்ஞ்ஞான மூர்த்தியே
வேமனா னந்த குருவே.*

---

*இந்தப் பாடலை அலசூர் யோகி முனிசாமி முதலியார் என்னும் பெரியார் அடிக்கடி பாடுவதுண்டு.

மூவிரு முகங்கள் போற்றி
முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற
ஈராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள்
மலரடி போற்றி யன்னான்
சேவலு மயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி போற்றி.

ஊரி லான்குணங் குறியிலான்
செயலிலா துரைக்கும்
பேரி லாவொரு முன்னிலான்
பின்னிலான் பிறிதோர்
சாரி லான்வரல் போக்கிலான்
மேலிலான் றனக்கு
நேரி லானுயிர்க் கடவுளா
யென்னுளே நின்றான்.

ஆறிரு தடந்தோள் வாழ்க
அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
யானைதன் னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
வாழ்கசீ ரடியா ரெல்லாம்.

பன்னிரு கரத்தாய் போற்றி
பசும்பொன்மா மயிலாய் போற்றி
முன்னிய கருணை யாறு
முகப்பரம் பொருளே போற்றி

கன்னிய ரிருவர் நீங்காக்
கருணைவா ரிதியே போற்றி
யென்னிரு கண்ணே கண்ணு
ளிருக்குமா மணியே போற்றி.

அஞ்சு முகந்தோன்றி னாறு முகந்தோன்றும்
வெஞ்சமரி லஞ்சலென வேல்தோன்றும்-நெஞ்சில்
ஒருகால் நினைக்கி லிருகாலுந் தோன்றும்
முருகாவென் றோதுவார் முன்.

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு
பலகோடி நூறுயிரம்
மல்லாண்ட திண்டோள் மணிவண்ணாஉன்
செவ்வடி செவ்வி திருக் காப்பு.

சிற்றஞ் சிறுகாலே வந்து
உன்னைச் சேவித்து உன்
பொற்றாமரையடியே போற்றும்
பொருள் கேளாய்
பெற்றம் மேய்த்துண்ணும்
குலத்தில் பிறந்து நீ
குற்றேவல் எங்களைக்
கொள்ளாமல் போகாது
இற்றைப்பறை கொள்வா
னன்றுகாண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழேழ்
பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே யாவோம்
உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றை நங் காமங்கள்
மாற்றேலோ ரெம்பாவாய்.

கருப்பூரம் நாறுமோ
கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான்
தித்தித் திருக்குமோ
மருப்பொசித்த மாதவன் தன்
வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன்
சொல்லாழி வெண்சங்கே.

செடியாய வல்வினைகள்
தீர்க்கும் திருமாலே
நெடியானே வேங்கடவா
நின்கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும்
அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்து உன்
பவளவாய்க் காண்பேனே.

தருதுயரம் தடாயேல் உன்
சரணல்லால் சரணில்லை
விரை குழுவும் மலர்ப் பொழில் சூழ்
விற்றுவக்கோட் டம்மானே
அரிசினத்தால் ஈன்றதாய்
அகற்றிடினும் மற்றவள் தன்
அருள்நினைந்தே யழும்குழவி
யதுவே போன்றிருந்தேனே.

மன்னுபுகழ்க் கௌசலைதன்
மணிவயிறு வாய்த்தவனே
தென்னிலங்கைக் கோன்முடிகள்
சிந்துவித்தாய் செம்பொன்சேர்

கன்னிநன் மாமதிள் புடைசூழ்
கணபுரத்து என் கருமணியே
என்னுடைய இன்னமுதே
இராகவனே தாலேலோ.

பச்சைமா மலைபோல்மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரரேறே
ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகருளானே.

கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான்
கனவிருளகன்றது காலையம்பொழுதாய்
மதுவிரிந் தொழுகின மாமலரெல்லாம்
வானவ ரரசர்கள் வந்துவந்தீண்டி
எதிர்திசை நிறைந்தனர் இவரொடும் புகுந்த
இருங்களிற் றீட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலில் அலைகடல் போன்றுளது எங்கும்
அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே.

அமலனாதிபிரான் அடியார்க்கு
என்னை ஆட்படுத்த
விமலன் விண்ணவர்கோன்
விரையார்பொழில் வேங்கடவன்
நிமலன் நின்மலன் நீதிவானவன்
நீள் மதிளரங்கத்தம்மான் திருக்
கமல பாதம் வந்து என்
கண்ணினுள்ளன வொக்கின்றதே.

கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணிய பெருமாயன் என்னப்பனில்
நண்ணித் தென்குருகூர் நம்பி யென்றக்கால்
அண்ணிக்கும் அமுதூறும் என்னாவுக்கே.

குலந்தரும் செல்வம் தந்திடும்
அடியார் படுதுயராயின வெல்லாம்
நிலத்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநிலமளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும்
பெற்ற தாயினும் ஆயின செய்யும்
நலந் தருஞ் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்.

ஏழை ஏதலன் கீழ் மகனென்னாது
இறங்கி மற்றவற்கு இன்னருள் சுரந்து
மாழை மான் மடநோக்கி உன்தோழி
உம்பி எம்பியென்றொழிந்திலை உகந்து
தோழன் நீ யெனக்கு இங்கொழியென்ற
சொற்கள் வந்து அடியேன் மனத்திருந்திட
ஆழிவண்ண நின்னடியிணை யடைந்தேன்
அணிபொழில் திருவரங்கத் தம்மானே.

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக—செய்ய
சுடராழியா னடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடராழி நீங்குகவே யென்று.

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை யிடுதிரியா—நன்புருகி

ஞானச் சுடர்விளக் கேற்றினேன், நாரணற்கு
ஞானத்தமிழ் புரிந்த தான்.

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன்—செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பால் இன்று.

மனமாசு தீரும் அருவினையும் சாரா
தனமாய தானே கைகூடும்—புனமேய
பூந்துழா யானடிக்கே போதொடு நீரேந்தி
தாம்தொழா நிற்பார் தமர்.

தீவினைக்கு அருநஞ்சை நல்வினைக்கு இன்னமுதத்தினை
பூவினை மேவிய தேவிமணாளனை புன்மை யெள்காது
ஆவினை மேய்க்கும் வல்லாயனை அன்றுலகீரடியால்
தாவின ஏற்றை எம்மானை எஞ்ஞான்று தலைப்பெய்வனே.

கலந்து நலியும் கடுந்துயரை நெஞ்சே
மலங்க வடித்து மடிப்பான்—விலங்கல்போல்
தொல்மாலைக் கேசவனை நாரணனை மாதவனை
சொல்மாலை எப்பொழுதும் சூட்டு.

உணர்ந்துணர்ந் திழிந் தகன்று
உயர்ந்துருவி யந்த இந்நிலைமை
உணர்ந்துணர்ந் துணரிலும் இறைநிலை
உணர்வரிது உயிர்காள்
உணர்ந்துணர்ந் துரைத்துரைத்து
அரியயனர னென்னும் இவரை
உணர்ந்துணர்ந் துரைத்துரைத்து
இறைஞ்சுமின் மனப்பட்ட தொன்றே.

நெஞ்சமே நல்லைநல்லை உன்னைப் பெற்றால்
என் செய்யோம் ? இனியென்ன குறைவிலம்
மைந்தனை மலராள் மணவாளனை
துஞ்சும் போதும் விடாது தொடர்கண்டாய்.

ஆவியே ஆரமுதே என்னை யாளுடை
தூவியம் புள்ளுடையாய் சுடர்நேமியாய்
பாவியேன் நெஞ்சம் புலம்பப் பலகாலும்
கூவியும் காணப்பெறேன் உன கோலமே.

பொலிக பொலிக பொலிக
போயிற்று வல்லுயிர்ச்சாபம்
நலியும் நரகமும் நைந்த
நமனுக்கு இங்கு யாதொன்றுமில்லை
கலியும் கெடும் கண்டுகொண்மின்
கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல்
மலியப் புகுந்து இசைபாடி
ஆடி யுழிதரக் கண்டோம்.

நாளான போகாமே நஞ்சணியுங் கண்டனுக்கே
ஆளாய அன்பு செய்வோம் மடநெஞ்சே அரன்நாமம்
கேளாய் நம் கிளைகிளைக்கும் கேடுபடாத்திறம் அருளி
கோளாய நீக்குமவன் கோளிலியெம் பெருமானே.

நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டா யாரறிவார்
சாநாளும் வாழ்நாளும் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே.

நன்னெஞ்சே யுனையிரந்தேன் நம்பெருமான் திருவடியே
உன்னஞ் செய்திருகண்டாய் உய்வதனை வேண்டுதியேல்

அன்னஞ்சேர் பிரமபுரத் தாரமுதை எப்போதும்
பன்அஞ்சீர்வாய் அதுவேபார் கண்ணே பரிந்திடவே.

தேனேக்குங் கிளிமழலை
உமைகேள்வன் செழும்பவளத்
தாஞேக்குந் திருமேனி
தழலுருவாஞ் சங்கரனை
வாஞேக்கும் வளர்மதிசேர்
சடையானை வானேர்க்கும்
ஏனேர்க்கும் பெருமானை
என்மனத்தே வைத்தேனே.

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்அடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்துகி டப்பதே.

ஈன்ருளு மாயெனக் கெந்தையுமா
யுடன் தோன்றினராய்
மூன்ருயுலகம் படைத்துகந்தான்
மனத்துள் ளிருக்க
ஏன்ருன் இமையவர்க் கன்பன்
திருப்பாதிரிப் புலியூர்த்
தோன்ருத் துணையாயிருந்தனன்
தன்னடி யோங்களுக்கே.

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேனினிப் பிறவாத
தன்மை வந்தெய்தினேன்

N51

கற்றவர் தொழுதேத்துஞ்
 சீர்க்கரையூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான் மறக்கினும்
 சொல்லும்நா நமச்சிவாயவே.

நீறு தாங்கிய திருநுதலானை
 நெற்றிக் கண்ணனை நிரைவளை மடந்தை
கூறு தாங்கிய கொள்கையி னானைக்
 குற்ற மில்லியைக் கற்றை யஞ்சடைமேல்
ஆறு தாங்கிய அழகனை அமரர்க்கரிய
 சோதியை வரிவரால் உகளுஞ்
சேறு தாங்கிய திருத்தினை நகருட்
 சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே.

வெறுப்பனவே செய்யுமென்
 சிறுமையை நின்பெருமையினுற்
பொறுப்பவனே அராப்பூண்பவனே
 பொங்கு கங்கைசடைச்
செறுப்பவனே நின் திருவருளால்
 என்பிறவியை வேர்
அறுப்பவனே உடையாய் அடியேன்
 உன் அடைக் கலமே.

அம்மையே யப்பா ஒப்பிலா மணியே
 அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
 புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதமளித்த
 செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
 எங்கெழுந் தருளுவ தினியே.

113659

பூதங்கள் தோறும் நின்றாயெனி னல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுத லல்லால்
கேட்டறி யோமுனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயற்றிருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக்கும் அரியாய் எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெமை யாண்டருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே.

# APPENDIX

## Geneological Table of

# Chittoor Arumuga Mudaliar

and

# Janaki Ammal Family

## **Arumuga Mudaliar** *disciple of* **Saint Narasimha Doss** *married to* **Janaki Ammal**

- (1) Karpagammal married A. Annasawmy Mudaliar
  - Bachathi Ammal married Kuppam Singaravelu Mudr.
    - Maragathammal (Deceased)
  - A. Tholasinga Mudaliar married Rangammal
  - Andalammal married Arunachella Mudr.
- (2) Kandasawmy Mudaliar married Angammal
- (3) Adhi Ammal (Deceased)
  - Annapurani ammal married Munisawmy Mudaliar
    - C. M. Kumarasawmy Mudaliar
    - C. M. Shanmugha Mudaliar

A.T. Kannabiran married Padma Bai — Radhai Bai married Dr. Sambasivan — A. T. Janakiram, B.Sc. married Pushpakantham — A. T. Ethirajan B.A. married Sakunthala — Rukmani married V. Rao B.A., B.L. — Pattammal

Usha

Dr. Indrani — Sampath — Lalitha — Chander — Sathi

Premsagar — Suda — Sukani

Udhaikumar — Vasanthakumar — K. Kumar — J. Kumar

Bhuvan — Gaja — Noren — Chander

**Kandasawmy Mudaliar** married **Angammal**

- Ethirajammal married Govindaraja Mudr.
  - Periasawmy
  - Jairam
- C. K. Parthasarathy (Deceased)
- C. K. Vasudevan (married)
  - Sarala Devi married Ananthasayanam
  - Harigopal (married)
  - Krishnamurti
- C. K. Kesavan (married)
  - Kouasalya
  - Sithapathi
  - Kandasami
  - Sivasankaran
  - Narayanasami
  - Thandavarayan
  - Malliga
- C. K. Srinivasan B.A. (Hons.) married Chokkammal
  - Ekambaram
  - Kothandaraman
  - Mahendari
  - Padmanabhan
  - Prabakaran
  - Dayakaran

**Rathnammal** married **Munusawmy Mudaliar**

- A. M. Raju Mudaliar
  - A. R. Somasundaram B.A.
  - A. R. Kanakasaabapathi married
  - Kothandam deceased
  - Mangammal married
- Devaki Ammal (Deceased)
  - Thillai Ammal

**Thulasi Ammal** married Belgaum - **Pachaiyappa Mudaliar**

- Rao Sahib V. P. Ramasawmy Mudaliar married Meenambal
  - Gajalakshmi (widow)
  - Papammal married V.C. Varadaraj
  - Nataraj B.Sc.,B.L.
  - Rukmani B.Sc. married Doraisawmy Mudr. B.E.
  - Saraswathi married A. Sivan
  - Anusuya married M. Nataraj B.A., D.T.S., M.S.M.Ry.
  - Gurunathan
  - Soundara-rajan

**Meenatchi Ammal** married **Shanmuga Mudaliar**

- Krishnasawmy
- Somasundaram deceased
- Manickam married
- Rathnavelu married
- Dr. Sabapathy married

**Abirami Ammal** married **Loganatha Mudaliar**

- Vittammal deceased
- Papathiammal deceased
- Lakshmanan deceased
- Nanjundan deceased
- Lakshmi Devi deceased
- Janakiram deceased
- Devaraj B.A. married Nagabushanam
  - Loganathan
  - Anantharaman
  - Ranganatham

**Chethu Ammal** married **Raju Mudaliar**

of Seri (Both deceased)

Adhimoola Mudaliar
married

Ekambara Mudaliar
married

Devanai ammmal
married Narayanaswamy Mudaliar

113659